# மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
# Mount Druitt Tamil Study Centre

Mobile : 0413 229 638 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au

செய்தி மடல் - 2025 – 04
29.11.2025




## திருக்குறள்

### அதிகாரம் 11 – செய்ந்நன்றி அறிதல்

குறள் : 103 பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது.

குறள் விளக்கம்: என்ன பயன் கிடைக்கும் என்று எண்ணிப் பார்க்காமலே, அன்பின் காரணமாக ஒருவர் செய்த உதவியின் சிறப்பு கடலை விடப் பெரிது.

"If we weigh the excellence of a benefit which is conferred without weighing the return, it is larger than the sea"

பழமையான மொழி, பண்பட்ட மொழி, நம் பைந்தமிழ் மொழி, தேனினும் இனியது நம் தீந்தமிழ் மொழி தமிழ் என்றால் எளிமை. தமிழ் என்றால் அழகு. தமிழ் என்றால் அமிழ்தம். மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம் கடந்த 35 ஆண்டுகளாக தமிழ் மொழி, கலை, கலாசாரத்தை எமது இளைய சந்ததிகளுக்கு கற்பித்து, தமிழ் வளர்க்கும் பணியில் பெரும் சேவையாற்றி வருகின்றது. மாணவர்களை தமிழை கற்ப்பிப்பது மட்டுமன்றி பண்பு, ஒழுக்கம், பணிவு, தன்னம்பிக்கை, ஆளுமை கொண்ட சிறந்த மாணவர்களாக உருவாக்கி வருவதுடன் அவர்களை ஒரு பொறுப்பு வாய்ந்த மாணவ சமுதாயமாகவும் உருவாக்கிவருகின்றது என்றால் மிகையாகாது. மாநிலத்தில் முதல் இடம் பெற்ற எமது பாடசாலை கடந்த இரு வருடங்களாக எமது பாடசாலையினால் தோற்றிய அனைத்து மாணவர்களும் HSC தமிழ் பரீட்சையில் Band 6 தகமையைப் பெற்று மீண்டும் எமது கல்வி நிலையத்தின் HSC முயற்சிக்கு உரமேற்றியுள்ளார். இச்சிறப்பு பெற்ற எமது கல்வி நிலையத்தில் தமிழ் கற்றிட வந்திருக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் 2025ம் ஆண்டுக்கான இடைக்கால செயற்குழு உறுப்பினர்களின் அன்பான வணக்கம். இச்செய்திமடல் மூலம் பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

### 1. பாடசாலை விபரம்

| | |
|---|---|
| வகுப்புகள் / **Classes :** | முன்பள்ளி முதல் ஆண்டு 12 HSC தமிழ் வரை / **Preschool to HSC** |
| நடைபெறும் இடம் / **Centre Location :** | **Colyton Public School**, 43 - 81 Nelson Street, Mount Druitt, NSW 2770 |
| மின்னஞ்சல் / **Email :** | mtdruitttsc@gmail.com |
| இணையத்தளம் /**Website :** | www.mtsc.org.au |
| முகப்புத்தகம் / **Facebook :** | https://www.facebook.com/groups/374995486577634/ |
| கைப்பேசி / **Mobile Phone :** | **0413 229 638** |

### 2. பாடசாலை நேரம் - பி.ப. 2:00 மணி முதல் பி.ப. 5:00 மணிவரை

பிள்ளைகளை பாடசாலைக்கு பி.ப. 1.55 மணிக்கு அனுப்பிவைக்குமாறும், பாடசாலை முடிவடையும் போது தாமதமாகாமல் வந்து அழைத்துச் செல்லுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| ஆரம்பமாகும் நேரம் : | பி.ப. 2.00 மணி |
| இடைவேளை : | பி.ப. 3.30ல் இருந்து பி.ப. 3.45 மணி வரை |
| முடிவடையும் நேரம் : | பி.ப. 5.00 மணி (முன்பள்ளி மற்றும் ஆரம்பப்பள்ளி பி.ப. 4.30 மணி வரை) |

பாடசாலை தொடர்பான மேலதிக விபரங்களுக்கு :

### 3. 2025ம் ஆண்டு பாடசாலையின் முக்கிய திகதிகள்

நான்காம் தவணை : 18.10.2025 முதல் 20.12.2025 வரை *

| | |
|---|---|
| ஆண்டிறுதிப் பரீட்சை : | 22.11.2025 |
| ஆண்டிறுதி மாணவர் தேர்ச்சி அறிக்கை : | 13.12.2025 |
| ஒளி விழா, பரிசளிப்பு விழா மற்றும் புதிய செயற்குழு அறிமுகம் : | 20.12.2025 |

### 4. ஆண்டு மலருக்கான நிழற்படம் எடுத்தல் - 06.12.2025

**எதிர்வரும் 06.12.2025 அன்று மாலை 2.30 மணியிளவில் ஆண்டு மலருக்கான நிழற்படம்** எடுக்க இருப்பதனால் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் எமது கலாச்சார உடையணிந்து வருகைதருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். அன்றைய தினம் நிழற்படம் எடுத்த பிற்பாடு வழமையான கற்றல் செயற்பாடுகளும் நடைபெறும் என்பதையும் உங்களது கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

### 5. வருடாந்த பரிசளிப்பு விழா 2025 (20.12.2025 சனிக்கிழமை அன்று மாலை 4.00 மணி முதல்)

எமது பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா மற்றும் நத்தார் கொண்டாட்டமும் இராப்போசன விருந்தும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 20ம் திகதி (20.12.2025) சனிக்கிழமை அன்று மாலை 4.00 மணிக்கு **St Marys Memorial Hall (Corner of The Great Western Highway and Mamre Road, St Marys, NSW 2751)** மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைவரும் இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பிப்பதுடன் நீங்கள் மண்டப வாகன தரிப்பிடத்தை பயன்படுத்தலாம் என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### 6. ஆண்டிறுதிப் பரீட்சை 2025

மாணவர்களுக்கான ஆண்டிறுதிப் பரீட்சைகள் 22.11.2025 அன்று முதல் வகுப்பு ஆசிரியர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதில் வாசிப்பு, கேட்டு கிரகித்தல், பேசுதல், எழுத்துப்பரீட்சை என்பன அடங்கும். எனவே பரீட்சை தொடர்பான விபரங்களை உங்களது பிள்ளைகளின் வகுப்பு ஆசிரியர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளவும். அத்துடன் ஆண்டிறுதி மாணவர் தேர்ச்சி அறிக்கை 13.12.2025 அன்று வழங்கவும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம்.

### 7. இணையவழி தொலைதூரக் தமிழ்க் கல்வி

கடந்த வருடம் முதல் எமது பாடசாலையினால் இணையவழி தொலைதூர தமிழ்க் கல்வி ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றது. இதில் இணைய விரும்பும் உங்களுக்கு தெரிந்த எமது தமிழ்பாடசாலைக்கு வர முடியாத தொலைவில் உள்ள மாணவர்கள் இணைந்து பயன் பெறலாம் என்பதை உங்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புகைப்படங்களைப் பார்வையிட இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

### 8. பேச்சுப் போட்டி - 2025

எமது பாடசாலையின் வருடாந்த பேச்சுப்போட்டி இவ்வருடமும் எமது பாடசாலை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இப்போட்டியில் அனைத்து வகுப்பு மாணவர்களும் பங்குபற்றியதுடன் ஆண்டு 11 மற்றும் ஆண்டு 12 மாணவர்கள் தாங்களே தயாரித்த பேச்சுக்களைப் பேசி நடுவர்களின் பராட்டுக்களையும் அவர்கள் பெற்றது மிகவும் பெருமைப்பட வேண்டிய விடயமாகும். இப்பேச்சுப் போட்டியில் மாணவர்கள் திறமையாக மேடையில் பேசுவதற்கு உதவிய ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கு எமது பாடசாலையின் நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கினறோம்.

### 9. கலை விழா 2025

20.09.2025 அன்று நடைபெற்ற எமது பாடசாலைக் கலை விழா அனைவருக்கும் பெருவிருந்தாக அமைந்திருந்தது. பல புதிய நிகழ்ச்சிகளை பாடசாலை நிர்வாகம் ஒழுங்குபடுத்தியது மட்டுமன்றி மாணவர்களது பல்வேறுபட்ட நிகழ்வுகள் இவ்விழாவில் இடம்பெற்று பற்பல மாணவர்களது கன்னி நிகழ்வுகளும் மேடையேறி அனைவரதும் பராட்டைப் பெற்றுத்தந்தது. இவ்விழாவில் கலந்து சிறப்பான ஆற்றலை வெளிப்படுத்திய மாணவ செல்வங்களுக்கும் அவர்களை ஊக்கப்படுத்திய பெற்றோர்களுக்கும் அதனை அழகுற வடிவமைத்து வழங்கிய ஆசிரியர்களுக்கும் பாடசாலையின் நிர்வாகத்தின் சார்பில் பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

### 10. வாணி விழா (சரசுவதி பூசை)

கடந்த 18.10.2025 அன்று பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்ற வாணி விழாவில் நிகழ்வில் கலந்து சிறப்பித்த மாணவ செல்வங்களுக்கும் அவர்களை ஊக்கப்படுத்திய பெற்றோர்களுக்கும் அதனை திறம்பட தொகுத்து வழங்கிய ஆசிரியர்களுக்கும் பாடசாலையின் நிர்வாகத்தின் சார்பில் பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

### 11. ஆசிரியர் தின விழா

கடந்த 08.11.2025 அன்று எமது பாடசாலையினால் இரண்டாவது வருடமாகவும் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை பாராட்டி கௌரவிப்பதற்காக ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டது. ஆசிரியர்கள் மாணவர்களாகவே மாறி பலதரப்பட்ட நிகழ்ச்சிகளை வழங்கியிருந்தார்கள். பாடசாலையின் நிர்வாகத்தின் சார்பில் அவர்களை வாழ்த்தி வணங்குகின்றோம்.

### 12. பெற்றோர் கலந்துரையாடல்

கடந்த 15.11.2025 அன்று நடைபெற்ற யாப்பு தொடர்பான பெற்றோர் கலந்துரையாடல் பங்குபற்றிய பெற்றோர்களில் பெரும்பான்மையானவர்களின் ஏகமனதான சம்மத்துடன் பாடசாலை நிர்வாகம் நிறைவேற்றியிருந்தது. விரைவில் திருத்தப்பட்ட யாப்பு பெற்றோர்களுக்கு அனுப்பப்பட்டு உரிய முறைப்படி பதிவு செய்யப்பட்ட பின்னர் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

### 13. பாடசாலைக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள்

உங்கள் பிள்ளைகளுக்கான இந்த வருடத்திற்கான பாடசாலை கட்டணத்தை இதுவரை செலுத்தாத புதியதாக இணைந்த மாணவர்களது பெற்றோர்கள் தவணை மூன்று முடியும் முன் செலுத்தி பாடசாலை திறம்பட நடைபெறுவதற்கு ஒத்துழைக்குமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றோம். நீங்கள் Creative Kids Voucher மூலமும் எமது பாடசாலைக் கட்டணத்தை செலுத்தலாம். எனவே பெற்றோர் கொடுப்பனவை நீங்கள் பணமாக அல்லது Creative Kids Voucher மூலம் செலுத்தலாம் என்பதை உங்களுக்கு அறியத்தர விரும்புகிறோம். மேலதிக விபரங்களுக்கு எமது கல்வி நிலைய பொருளாளர் திரு. த.மயூரதன் (0421 571 201) அல்லது உப பொருளாளர் திரு.க.கௌரீஸ்வரன் (0480 165 37) அவர்களை தொடர்பு கொள்ளவும்.

(Name: **Mount Druitt Tamil Study Centre** (Please leave transfer note with your kids name and class as reference.)
Account Number with BSB: **112 879 043215976**

### 14. மாணவர்களின் இலக்கண அறிவை மேம்படுத்தல்

இந்த வருடமும் ஆண்டு 9 மாணவர்கள் "இலக்கிய வட்டம்" என்ற நிகழ்வை ஒழுங்குசெய்துள்ளார்கள். மாணவர்கள் "இலக்கிய இன்பம்" என்ற கவிதையையும் "ஏகலைவன்" என்ற தலைப்பில் பொம்மலாட்டம் நிகழ்வையும் நிகழ்த்த உள்ளார்கள். அவர்களது முயற்சியில் அவர்களால் எழுதப்பட்ட புத்தகமும் வெளியிடப்பட இருக்கின்றது. மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம் மாணவர்களது இவ்வாறான முயற்சிகளை விருப்புடன் பராட்டுவதுடன் தொடர்ந்து இவ்வாறான முயற்சிகளுக்கு துணைநிற்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### 15. தற்காலிகமாக நிர்வாக வெற்றிடங்களை நிரப்புதல்

நடப்பாண்டில் இடைவிலகியதால் ஏற்பட்ட பாடசாலை நிர்வாக வெற்றிடங்களுக்கு கடந்த வருடம் அதற்கு விண்ணப்பித்திருந்த தகுதியான நிர்வாக உறுப்பினர்களை நியமித்து பாடசாலையின் நிர்வாகம் தங்குதடையின்றி மாணவர்களது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என நான்காம் தவணையில் இடம்பெற்றிருந்த நிர்வாகக்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு முறையே திரு. சிவசங்கர் சிவசுப்பிரமணியம் அவர்களை செயலாளராகவும் திரு. பேரின்பமூர்த்தி ஆறுமுகசாமி அவர்களை உபதலைவராகவும் மற்றும் திரு.கந்தையா சுதாகரனை உபசெயலாளராகவும் நியமித்துள்ளோம் என்பதை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### 16. 2026ம் ஆண்டிற்குரிய பாடசாலை நிர்வாகக் குழு

எமது பாடசாலையின் 2026ம் ஆண்டின் நிர்வாகக் குழு அங்கத்தவர்களாக பங்குபற்ற விருப்பமுடையவர்கள் எமது செயலாளர் திரு. சிவசங்கர் சிவசுப்பிரமணியம் அவர்களிடம் பாடசாலை நேரத்தில் தங்களது விண்ணப்பப்படிவத்தை கையளிக்குமாறு தங்களை தயவாக கேட்டுக்கொள்கின்றோம்.

புதிய நிர்வாகக் குழு அங்கத்தவர்களாக சேர விரும்புபவர்களுக்கான விண்ணப்பப்படிவம் ஏற்கனவே புலனக்குழு மூலம் கடந்த வாரம் அனைவருக்கும் பகிரப்பட்டிருந்தது. விண்ணப்ப முடிவு திகதியான 06.12.2025 மாலை 4.00 மணிக்கு முன்பாக பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தை எமது செயலாளரிடம் நேரடியாக ஒப்படைக்குமாறு தங்களை தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம். இதுவரை காலமும் பாடசாலை நிர்வாகத்தில் பங்குகொள்ளாத பெற்றோர்கள் 2026ம் ஆண்டின் பாடசாலை நிர்வாகத்தில் இணைந்து மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையத்தின் வளர்ச்சிக்கு உதவும்படி தங்களை தாழ்மையுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

### 17. 2026ம் ஆண்டிற்குரிய பாடசாலை நிர்வாகக் குழு அறிமுகம்

எமது பாடசாலையின் 2026ம் ஆண்டிற்கான பாடசாலை நிர்வாகக்குழுவில் இணைந்தவர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வும் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் இடம்பெற உள்ளது. இந்த வருடம் பாடசாலைக்கு பல்வேறுபட்ட சிரமங்களின் மத்தியிலும் மாணவர்களை தமிழ் பாடசாலைக்கு அழைத்துவந்த ஒவ்வொரு பெற்றோர்களுக்கும் 2025ம் ஆண்டின் நிர்வாகத்தின் சார்பில் நன்றியை கூறிக்கொள்வதுடன் வழமைபோல 2026ம் ஆண்டிற்கு தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை நிர்வாகத்திற்கு தங்களது பூரண ஆதரவினை வழங்குமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

### 18. பாடசாலை விடுமுறை

எமது பாடசாலை தவணை நான்கின் கடைசி நாளான 20.12.2025 அன்று பரிசளிப்பு விழாவுடன் நிறைவடைந்து எதிர்வரும் 07.02.2026 சனிக்கிழமை அன்று மீண்டும் புதிய வருடத்திற்கான முதலாம் தவணைக்காக திறக்கப்படும் என்பதனையும் உங்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.



நன்றி

மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலைய நிர்வாகம்.

**'தமிழ் வளர்த்தே தீருவோம்**
**தாய் மொழி எங்கள் செல்வம்'**